# தூத்துக்குடி நகரமன்றம்
# அவசரக் கூட்டப்பொருள்

2007ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை III விதி எண் 2( 2) ன் கீழ் தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. இந்நகராட்சி சொத்துவரி வசூல் செய்ய வருவாய் பிரிவுக்குத் தேவையான ஜப்தி அறிவிப்பு நோட்டீஸ் 10,000 எண்ணமும் சொத்துவரி, புதிய வரிவிதிப்பு அல்லது திருத்தத்தை குறித்த விசேஷ நோட்டீஸ் 50 புத்தகமும் (1 புக் 50 பக்கம் கொண்டது) சிதம்பரனார் மாவட்ட அச்சக சேவை தொழில் கூட்டுறவு நிறுவனம் லிமிடெட், கோவில்பட்டியில் வாஙகவும் அதற்கான செலவினம் ரூ.14,450/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:** அனுமதிக்கலாம்

அ1/22294/07

**தீர்மானம் எண்: 627**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

2. இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய வடக்குப் பகுதியான போல்பேட்டை, சுந்தரவேல்புரம், கே.வி.கே.நகர், அண்ணாநகர் பொதுமக்கள் வரி செலுத்தவதற்கு ஏதுவாக புதிய பேருந்து நிலையத்தில் பொருள் பாதுகாப்பு அறை எண் 81க்கு இடையில் குத்தகைக்கு விடப்படாமல் நகராட்சிப் பொறுப்பில் இருக்கும் அறையில் கணினி வரிவசூல் மையம் ஒன்று அமைக்கவும் அதற்கான வசதிகள் செய்து கொடுக்க ஏற்படும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்

அ1/22106/07

**தீர்மானம் எண்: 628**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

3. இந்நகராட்சிக்கு சொந்தமான போல்டன்புரம் 1, 2, 3 குறுக்குத் தெரு மற்றும் ராமசாமிபுரம் 1, 2, 3 குறுக்குத் தெரு சந்துகளில் சிமெண்ட் சாலை மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,25,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 141/2007—08

**தீர்மானம் எண்: 629**

அலுவலகக் குறிப்பு படி அனுமதி வழஙகப்பட்டது

4. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள ஆவுடையார்புரம் மற்றும் சுப்பிரமணியபுரம் தெருக்களில் சிமெண்ட் சாலை அமைக்க மதிப்பீடு தொகை ரூ.4,00,000/—க்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. மேற்கண்ட சாலையில் ஒரு சந்தில் கூடுதலாக சிமெண்ட் நடைபாதை அமைக்க வேண்டியிருப்பதால் அதற்கான கூடுதல் செலவுத் தொகை

ரூ.37,220/— (ரூபாய் முப்பத்தி ஏழாயிரத்து இருநூற்று இருபது மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியினை மன்றம் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் திரு எஸ்.சுதர்சன் மூலம் செய்து முடிக்கலாம். ம.ப.எண்.140/07—08

**தீர்மானம் எண்: 630**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

5. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பிரையண்ட்நகர் 1வது தெருவில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.37,500/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.142/07—08

**தீர்மானம் எண்: 631**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

6. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள காமராஜர் சாலையில் கிழக்கு பகுதியில் தார்சாலை மற்றும் சாலையின் இருபுறஙகளிலும் பள்ளமாக உள்ளளால் சிவப்பு சரள் பரப்பி மட்டம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.35,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.143/07—08

**தீர்மானம் எண்: 632**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

7. இந்நகராட்சிக்கு சொந்தமான போல்டன்புரம் 3வது தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.4,40,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.144/07—08

**தீர்மானம் எண்: 633**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

8. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள எஸ்.எஸ்.மார்க்கெட்டில் மழைநீர் வடிகால், சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, மற்றும் கழிவறை பராமரிப்புப் பணி செய்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5,50,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.145/07—08

**தீர்மானம் எண்: 634**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

9. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள அண்ணாநகர் 9வது தெருவில் பக்கிள் ஓடையின் குறுக்காக பாலம் அமைக்கும் பணி மற்றும் அண்ணாநகர் 6வது தெரு முதல் 9வது தெரு

இணைப்பு சாலையில் தார்சாலை அமைத்திடவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6,75,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.146/07–08

**<u>தீர்மானம் எண்: 635</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

10. இந்நகராட்சி பராமரிப்பில் கான்வென்ட் கிழமேல் சாலையில் மழைநீர் வடிகால் உயர்த்தி கட்டும் பணி மற்றும் தார்ச்சால அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2,05,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.147/07–08

**<u>தீர்மானம் எண்: 636</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

11. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள மாசில்லாமணிபுரம் 1வது தெருவிலுள்ள சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் மேற்படி சாலையினை புதியதாக தார்ச்சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4,95,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.148/07–08

**<u>தீர்மானம் எண்: 637</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

12. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள சிவந்தாகுளம் பிரதான சாலையின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை சீரமைத்து தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,90,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.149/07–08

**<u>தீர்மானம் எண்: 638</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

13. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள மீளவிட்டான் சாலை மிகவும் பழுதடைந்து போக்குவரத்துக்கு மிகவும் இடையூராக உள்ளதால் மேற்படி சாலையில் தார்சாலை அமைத்திட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.3,85,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.150/07–08

**<u>தீர்மானம் எண்: 639</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

14. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள அய்யலு சந்து தெருவில் வடிகால் உயர்த்தி கட்டி சிறுபாலம் அமைத்தல் மற்றும் தார்சாலை போடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,70,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.151/07–08

**<u>தீர்மானம் எண்: 640</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

15. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள டுவிபுரம் 5வது தெருவில் சாலை மிகவும் பழுதடைந்து போக்குவரத்துக்கு இடையூராக இருப்பதால் மேற்படி சாலையினை பழுது நீக்கம் செய்து புதிய தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5,75,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.152/07—08

**தீர்மானம் எண்: 641**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

16. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள ராமசாமிபுரம் 3வது தெருவில் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி மற்றும் தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.4,80,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.153/07—08

**தீர்மானம் எண்: 642**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

17. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தாமோதரநகர் கிழமேல் சாலையில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.4,85,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.154/07—08

**தீர்மானம் எண்: 643**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

18. இந்நகராட்சி பகுதி 1வது வார்டில் அமைந்துள்ள ஸ்டேட்பாஙக் காலனி 60‘ சாலையில் மேற்பக்கம் எட்டையாபுரம் ரோடு இணைக்கும் இடத்தில் புதியதாக தார்சாலை அமைக்கவும், சாலையின் இருபுறம் செம்மன் சரல் விரிக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 1,70,000/— (ரூபாய் ஒரு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

ம.ப.எண்.156/07—08

**தீர்மானம் எண்: 644**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

19. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பிரையண்ட்நகர் 2வது தெருவில் சாலையின் இருபுறஙகளிலும் பள்ளமாக இருப்பதால் மேற்படி சாலையில் ஓரஙகளில் சிவப்பு சரள் நிரப்பி மட்டம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.74,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண்.154/07—08

**தீர்மானம் எண்: 645**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

20. தூத்துக்குடி நகராட்சி வளர்ந்து வரும் நகராட்சியாக உள்ளது. தூத்துக்குடி நகரம் 1886ஆம் ஆண்டு நகராட்சியாக அமைக்கப்பட்டு 17—4—1984ம் ஆண்டு முதல் சிறப்பு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்நகரம் முத்துநகர் என்ற சிறப்புடன் நாட்டிலுள்ள

பத்து துறைமுக நகரங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இந்நகரின் மொத்த பரப்பளவு 13.47 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2001ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,16,058 ஆகும்.

இந்நகரை சுற்றியுள்ள கிராம பஞ்சாயத்து பகுதிகளில் 'ஸ்பிக்' உரத் தொழிற்சாலை, ஸ்டெர்லைட் காப்பர் நிறுவனம், அனல் மின் நிலையம் போன்ற பெரும் தொழிச்சாலைகள் அமைந்துள்ளன. மேலும் அருகிலுள்ள மீளவிட்டான், முள்ளக்காடு, முத்தையாபுரம், சங்கரபேரி மற்றும் மாப்பிள்ளையூரணி போன்ற கிராம பஞ்சாயத்துகளில் ஏராளமான சிறிய நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. தூத்துக்குடி நகர்ப் பகுதியிலும், புறநகர் பகுதியிலும் எண்ணற்ற உப்பளங்கள் உள்ளன. நாட்டின் உப்பு உற்பத்தியில் தூத்துக்குடி இரண்டாம் இடத்தை வகிக்கிறது. தூத்துக்குடி நகரம் தரைவழிச் சாலை, இரயில் மற்றும் கடல்வழி என்று அனைத்து போக்குவரத்திலும் சிறப்பாக இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகரிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள குமாரகிரி என்ற கிராமத்திலுள்ள விமான நிலையத்திலிருந்து விமான போக்குவரத்து தொடங்கப்பட்டு நாட்டின் வான்வழி வரைபடத்தில் தூத்துக்குடி இடம் பெற்றுள்ளது.

மேலும் இந்நகர்மன்றம் தீர்மானம் எண் 900 நாள் 14–8–06ல் தூத்துக்குடி நகராட்சியுடன் அய்யனடைப்பு, சஙகரப்பேரி, மாப்பிள்ளையூரணி, தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம், முள்ளக்காடு, அத்திமரப்பட்டி, கோரம்பள்ளம் மற்றும் மீளவிட்டான் போன்ற கிராமஙகளை இணைத்து மாநகராட்சியாக உயர்த்துவதற்கு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்நிலையில் மேலும் தூத்துக்குடி நகராட்சியுடன் கூடுதலாக 19 கிராமஙகளை இணைத்து மாநகராட்சியாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமஙகள் பற்றிய விபரம்

| வரிசை எண் | பெயர் | பரப்பளவு சதுர கிலோ மீட்டர் | மக்கட்தொகை 2001 கணக்கெடுப்புபடி | ஆண்டு வருமானம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | தூத்துக்குடி சிறப்புநிலை நகராட்சி | 13.47 | 216058 | 18,82,00,000 |
| 2. | அய்யனடைப்பு | 9.00 | 2838 | 21,14,000 |
| 3. | சஙகரப்பேரி | 13.00 | 11551 | 77,56,000 |
| 4. | மாப்பிள்ளையூரணி | 9.00 | 27361 | 75,38,500 |
| 5. | தூத்துக்குடி ரூரல் | 10.41 | 11523 | 30,30,200 |
| 6. | முத்தையாபுரம் | 32.00 | 31813 | 1,15,99,220 |
| 7. | முள்ளக்காடு | 8.00 | 22071 | 7,07,526 |
| 8. | அத்திமரப்பட்டி | 5.78 | 18767 | 39,19,690 |
| 9. | கோரம்பள்ளம் | 6.00 | 3790 | 66,51,000 |
| 10. | மீளவிட்டான் | 21.00 | 30758 | 1,97,20,000 |
| 11. | மறவன்மடம் | 11.34 | 2625 | 1,14,665 |
| 12. | குமாரகிரி | 16.40 | 10997 | 13,44,141 |
| 13. | முடிவைத்தானேந்தல் | 19.31 | 5578 | 3,01,372 |
| 14. | தருவைக்குளம் | 17.28 | 6712 | 1,65,062 |
| 15. | பழைய காயல் | 22.12 | 4925 | 1,49,062 |
| 16. | சாமிநத்தம் | 13.46 | 1905 | 3,30,412 |
| 17. | தெற்கு வீரபாண்டியபுரம் | 12.88 | 1606 | 19,245 |
| 18. | சில்லாநத்தம் | 11.56 | 1669 | 17,736 |
| 19. | புதூர் பாண்டியாபுரம் | 9.76 | 743 | 1,49,820 |
| 20. | மேல அரசரடி | 13.42 | 3419 | 2,07,173 |
| 21. | கீழ அரசரடி | 8.87 | 1740 | 45,845 |
| 22. | குலையன்கரிசல் | 12.66 | 4077 | 2,09,650 |

| | | | | |
|---|---|---|---|---|
| 23. | சேர்வைக்காரன்மடம் | 10.35 | 4490 | 3,64,939 |
| 24. | கட்டாளங்குளம் | 19.68 | 2364 | 1,21,400 |
| 25. | கூட்டுடன்காடு | 8.84 | 3792 | 4,83,376 |
| 26. | செந்திலாப்ண்ணை | 2.24 | 1426 | 58,254 |
| 27. | தெற்கு சிலுக்கன்பட்டி | 4.41 | 783 | 9,620 |
| 28. | வடக்கு சிலுக்கன்பட்டி | 4.70 | 713 | 9,861 |
| 29. | முத்துசாமிபுரம் | 6.13 | | |
| | **மொத்தம்** | **353.07** | **436094** | **255337769** |

மேலே குறிப்பிட்டவாறு தூத்துக்குடி நகராட்சி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை இணைக்கும் பொழுது மொத்த பரப்பளவு 353.07 சதுர கிலோ மீட்டர் அமைகிறது. மேலும் 2001ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 436094 ஆகும். மேற்குகுறிப்பிட்டவாறு சுற்றியுள்ள பகுதியிலுள்ள கிராமங்களை ஒருங்கிணைக்கும் பொழுது மொத்த ஆண்டு வருமானம் ரூ.25.53 கோடி அளவிற்கு உயரும்.

மேலும் தற்சமயம் சேது சமுத்திர திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து அத்திட்டம் செயல்படுத்தப்படும் நிலையிலுள்ளது. மேற்படி திட்டம் செயலாக்கம் முடிவடைந்தவுடன் தூத்துக்குடி துறைமுகம் நாட்டிலுள்ள துறைமுகங்களுள் மிக முக்கிய துறைமுகமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் தூத்துக்குடியை சுற்றியுள்ள கிராமங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மேம்படும். மேலும் தூத்துக்குடியில் புதிதாக தொழிற்சாலைகள் மற்றும் தொழில் வர்த்தகங்கள் அமைய வாய்ப்புகள் உருவாகும். அதனால் தூத்துக்குடி பொருளாதாரத்தில் சிறந்த ஒரு நகரமாக உயரும் என்பதில் ஐயமில்லை. தொழில்வளம் பெருகும் பட்சத்தில் தூத்துக்குடியில் அதிக அளவில் பெரும் வளர்ச்சியடைய வாய்ப்புள்ளது. அவ்வாறு வளர்ச்சியடையும் பொழுது தூத்துக்குடி நகர மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் சிறந்த முறையில் ஏற்படுத்தவும், நகராட்சியின் பொருளாதார நிலையினை உயர்த்தி அனைத்து வழிகளிலும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. எனவே இந்நகராட்சியை சுற்றியுள்ள கிராமங்களை தூத்துக்குடியுடன் இணைக்கும் பட்சத்தில் மேற்படி வசதிகளை செய்து கொடுக்க ஏதுவாக இருக்கும். மேலும் எல்லா அடிப்படை வசதிகளையும் மக்களுக்கு அளிக்கக்கூடிய வலுவான உள்கட்டமைப்புகளுடன் இந்நகராட்சியின் தரம் உயர்த்தப்பட வேண்டும். எனவே இந்நகராட்சி மாநகராட்சி அந்தஸ்துக்கு உயர்த்துவது மிக அவசியமாகிறது.

எனவே மேலே குறிப்பிட்டவாறு தூத்துக்குடி நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களை ஒருங்கிணைத்து விரிவாக்கம் செய்யவும், மேற்படி கிராமங்களை இணைத்து தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்துவதற்கும் அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு:**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

ஜி1. 18223/02

<u>**தீர்மானம் எண்: 646**</u>

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

21. இந்நகராட்சி மேற்கு எல்கையில் இருந்து சுமார் 3. 54 கி.மீ. தூரத்திலுள்ள கோரம்பள்ளம் என்ற கிராமத்திலிருந்து பக்கிள் ஓடை ஆரம்பித்து இறுதியில் இந்நகராட்சியின் கிழக்கு பகுதியான திரேஸ்புரம் பகுதியில் அதாவது மன்னார் வளைகுடாவில் சங்கமம் ஆகிறது.

இந்த ஓடையின் மொத்த நீளம் சுமார் 10.107 கி.மீ ஆகும். இந்நகராட்சி பகுதியில் செல்லும் பக்கிள் ஓடையின் நீளம் 6. 567 கி.மீ. ஆகும் மேற்படி பக்கிள் ஓடை சீரமைப்பு பணி சம்பந்தமாக இவ்வலுவலக இதே எண்ணிட்ட 26–6–06ம் தேதிய கடிதத்தில் மேற்படி

இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அளவீடு செய்ய சர்வே உதவி இயக்குநர் அவர்களை பணிக்குமாறு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் **01–07–2006**ல் உத்தரவிட்டதன் பேரில் நில அளவை உதவி இயக்குநர் மூலம் **14–07–2006**ல் கடித செயல்முறை ஆணையில் பக்கிள் ஓடையில் ஆக்கிரமிப்புகள் பற்றிய விபரஙகளை நில அளவை செய்து அறிக்கை செய்ய நில அளவை சார் ஆய்வாளர்கள் பணிக்கப்பட்டு பக்கிள் ஓடையில் உள்ள ஆக்கிரமிப்புகள் நில அளவை செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பக்கிள் ஓடையில் நில அளவை செய்ததில் தற்காலிக ஆக்கிரமிப்பு **323** எண்ணஙகளும், நிரந்தர ஆக்கிரமிப்புகள் **230** எண்ணஙகளும் ஆக மொத்தம் **553** எண்ணஙகள் ஆக்கிரமிப்புகள் உள்ளன என கண்டறியப்பட்டது. மேலும் மீன்வளத்துறைக்கு பாத்தியப்பட்ட இடம் சர்வே வார்டு எண் **6**, பிளாக் **7**, புல எண் **617**, **1. 8057** ஹெக்டேர் பரப்பளவு **0.25** கி.மீ தூரம் பக்கிள் ஓடை பகுதியில் உள்ளது.

பக்கிள் ஓடையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அதாவது பக்கிள் ஓடையின் இருபுறமும் சாலைகள் அமைக்கவும், பூஙகாக்கள், பாலஙகள் மற்றும் அபிவிருத்திகளை மேற்க்கொள்ளவும் தொழில் நுட்ப ஆலோசகர் நியமனம் செய்ய நகர்மன்றம் தனது தீர்மான எண் **952** நாள் **31–8–2006**ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. நகர்மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் பக்கிள் ஓடையை சீரமைக்கும் பொருட்டு திட்ட அறிக்கை தயார் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் வில்பர் சுமித் என்ற நிறுவனத்தை கன்சல்டென்டாக நியமித்து உத்திரவிட்டதின் பேரில் பக்கிள் ஓடை திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி இறுதி கட்ட நிலையில் உள்ளது.

இந்நிலையில் நகராட்சி பகுதியிலுள்ள பக்கிள் ஓடையானது வருவாய் துறை மற்றும் மீன்வளத்துறைக்கு பாத்தியப்பட்ட இடமாக இருப்பதால் ஓடையிலுள்ள தற்காலிக மற்றும் நிரந்தர ஆக்கிரமிப்புகளை வருவாய்த்துறை மூலம் அப்புறப்படுத்த கோரவும் பக்கிள் ஓடையினை தூத்துக்குடி **3**வது மைலில் இருந்து திரேஸ்புரம் உள்ள பகுதி வரை நகராட்சி எல்லைப் பகுதிக்குட்பட்ட பகுதியினை மேற்கண்ட அபிவிருத்தி பணிகளை மேற்க்கொள்ளும் பொருட்டு நகராட்சிக்கு நிலமாற்றம் செய்து ஒப்படைக்கவும் மாவட்ட ஆட்சியருக்கு கருத்துரு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 23428/04

**<u>தீர்மானம் எண்: 647</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

**22.** தூத்துக்குடி நகராட்சிக்கு **12**வது நிதிக்குழு பரிந்துரைத்திட்டம் **2007–08**ன் கீழ் கணனி மயமாக்குதல் மற்றும் மின் கட்டணம் செலுத்துதல் நிதி முதல் கட்டமாக ரூ **12,01,595/–** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது கட்ட ஒதுக்கீடு சேர்த்து மொத்தம் ரூ **24,03,189/–** க்கு பணிகள் செய்ய கீழ்க்கண்ட பணிகள் செய்வதற்கும், அதற்கான மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

1. கணனி பராமரிப்பு மற்றும் அலுவலக உபயோகத்திற்கு ஜெனரேட்டர் ( 62.5 K.V) (Covered Type) வாஙகுதல் மற்றும் வயரிங செய்யும் பணி மற்றும் அறை கட்டும் பணி .. **9. 50**

2. பிரிவுகள் வாரியாக அலுவலக உபயோகத்திற்கு **10** எண்ணம் கணனிகள் **10** எண்ணம் பிரிண்டர்கள் மற்றும் **10** எண்ணம் U P S வாஙகுதல் ..**4. 40**

3. கணனி பிரிவிற்கு Server மற்றும் UPS வாஙகுதல் ..**2. 00**

4. கணனிகள் வைப்பதற்கான டேபிள் மற்றும் சேர் வாஙகுதல் ..0. 25

5. அனைத்து கணனிகளுக்கும் ஆன் லைன் வசதி செய்தல் மற்றும் மின் இணைப்பு வசதி செய்தல் .. 0. 50

6. அலுவலக உபயோகத்திற்கு லேப் டாப் கம்யூட்டர் வாஙகுதல் .. 0. 40

7. மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணம் செலுத்துதல் .. 8. 88

8. கணனி அறை தடுத்தல் Infrastructure facility to Computer room .. 1. 30

<u>**அலுவலகக் குறிப்பு:**</u>

1. அனுமதிக்கலாம்.

2. DGS & D விலை விகிதத்தில் நேரடியாக வரப்பெற்றோ அல்லது ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்குவதற்கோ மன்றம் அனுமதிக்கலாம்.

3. ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை விட கூடுதல் செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பர செலவீனத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

4. மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின்சார கட்டண கூடுதல் செலவினத் தொகையினை டேவணித்தொகையிலிருந்து பெறப்பட்ட தொகையிலிருந்து செலுத்தலாம்.

நகஎண் இ1. 21306/07

<u>**தீர்மானம் எண்: 648**</u>

அலுவலகக் குறிப்பு 1, 2, 3 மற்றும் 4 அனுமதிக்கப்பட்டது. மேலும் பொருளில் கண்டுள்ள ஜெனரேட்டர் வாஙகுவது தொடர்பாக நகர்மன்ற தீர்மானம் எண் 624 நாள் 31–10–2007ல் ஏற்கெனவே ரூ 7. 50 இலட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால் ஜெனரேட்டர் அறை கட்டும் பணிக்கான கூடுதல் செலவீனம் ரூ 2. 00 இலட்சத்திற்கு மட்டும் அனுமதி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது

23. இந்நகராட்சிக்கு சொந்தமான சின்னமணி நகர் பிரதான சாலை ஆசிரியர் காலனி சந்திப்பு வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 4,65,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

<u>**அலுவலகக் குறிப்பு:**</u> மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண் 157/2007–08

<u>**தீர்மானம் எண்: 649**</u>

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

24. இந்நகராட்சிக்கு சொந்தமான டூவிபுரம் 1வது தெரு மேற்கு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

<u>**அலுவலகக் குறிப்பு:**</u> மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண் 161/2007–08

<u>**தீர்மானம் எண்: 650**</u>

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

25. இந்நகராட்சிக்கு சொந்தமான கணேஷ்நகர் தென்வடல் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் புதிதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 8,75,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ம.ப.எண் 158/2007—08

**<u>தீர்மானம் எண்: 651</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழங்கப்பட்டது

26. இந்நகராட்சிக்கு சொந்தமான கணேசபுரம் கிழமேல் மற்றும் தென்வடல் சாலையில் தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 4,30,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ம.ப.எண் 159/2007—08

**<u>தீர்மானம் எண்: 652</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழங்கப்பட்டது

27. இந்நகராட்சிக்கு சொந்தமான லெவஞ்சிபுரம் பகுதியில் மழைநீர் மற்றும் கழிவுநீர் தெருக்களில் தேஙகி சுகாதார கேடு விளைவிக்கும் சூழ்நிலை உள்ளதால் மேற்கண்ட இடத்தில் புதியதாக தொட்டி அமைத்து கழிவுநீரை வெளியேற்ற தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 50,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ம.ப.எண் 160/2007—08

**<u>தீர்மானம் எண்: 653</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழங்கப்பட்டது

28. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள பொறியாளர் குடியிருப்பில் மராமத்து செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 65,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ம.ப.எண் 162/2007—08

**<u>தீர்மானம் எண்: 654</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழங்கப்பட்டது

29. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள சத்திரம் தெருவில் S.A.V மேல்நிலைப் பள்ளி முதல் இரண்டாம் கேட் சந்திப்பு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 3,50,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ம.ப.எண் 163/2007—08

**<u>தீர்மானம் எண்: 655</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழங்கப்பட்டது

30. இந்நகராட்சிக்கு சொந்தமான V.E ரோடு மற்றும் சுப்பிரமணியபுரம் சந்திப்பில் தார்சாலை மற்றும் பாதாள சாக்கடை மேன் ஊேறால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 1,20,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண் 164/2007–08

**தீர்மானம் எண்: 656**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

31. இந்நகராட்சிக்கு சொந்தமான காளியப்பன் பிரதான சாலையில் புதிதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 6,25,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண் 165/2007–08

**தீர்மானம் எண்: 657**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

32. இரண்டாம் மாநில நிதிக்குழு பரிந்தரைத்திட்டம் 2006–07 ஊக்க நிதியின் கீழ் சாலை மற்றும் வடிகால் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை சென்னை அவர்கள் மூலமாக டிவிசனல் ஸ்டாண்டர்டு (சென்னை பதிப்பு) மற்றும் தினமணி (அனைத்து பதிப்பு) விளம்பரம் செய்வதற்கும் அதற்கான விளம்பரக் கட்டணம் மெசர்ஸ் GAMAS ADVERTISING, CHENNAI அவர்களுக்கு ரூ 22,320/– செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்.

இ1. 17129/07

**தீர்மானம் எண்: 658**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

33. இந்நகராட்சி பகுதி சின்னமணி நகரில் மண்சாலையை தார்சாலையாக அமைக்கும் பணியை இரண்டாவது மாநில குழு பரிந்துரையின் கீழ் செய்ய 19–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு வி.தஙகராஜ் | மதிப்பீட்டிற்கு ரூ.0.20% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு கே.வேலாயுதம் | மதிப்பீட்டிற்கு ரூ.0.03% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு:**

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 491 தேதி 21–9–07ல் ரூ.5,75,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.20% குறைவானதுமான திரு வி.தஙகராஜ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண்.134/07–08

**தீர்மானம் எண்: 659**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

34. இந்நகராட்சி பகுதி சஙகர் காலனியில் மண்சாலையை தார்சாலையாக அமைக்கும் பணிக்கு இரண்டாவது மாநில நிதிக்குழு பரிந்துரையின் கீழ் செய்ய 19–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு எஸ்.ரம்போலா | மதிப்பீட்டிற்கு ரூ.0.09% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எஸ்.சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ.1.26% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 491 தேதி 21–9–07ல் ரூ.5,50,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.09% குறைவானதுமான திரு எஸ்.ரம்போலா என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண். /07–08

**<u>தீர்மானம் எண்: 660</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

35. இந்நகராட்சி பகுதி கிருஷ்ணராஜபுரம் 8வது தெருவில் வடிகால் மற்றும் சாலை அமைக்கும் பணி இரண்டாவது மாநில குழு பரிந்துரையின் கீழ் செய்ய 19–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திருமதி எஸ்.சாந்தி அருட்லா நிர்மலா தேவி | மதிப்பீட்டிற்கு ரூ.0.10% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு ஐ.ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு ரூ.1.55% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 490 தேதி 21–9–07ல் ரூ.6,50,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.10% குறைவானதுமான திருமதி சாந்தி அருட்லா நிர்மலா தேவி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண்.130/07–08

**<u>தீர்மானம் எண்: 661</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

36. இந்நகராட்சி பகுதி கிருஷ்ணராஜபுரம் 7வது தெருவில் வடிகால் பணிகளுடன் சாலைப்பணிகள் செய்ய 19–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

1) திருமதி எஸ்.சாந்தி அருட்லா நிர்மலா தேவி — மதிப்பீட்டிற்கு ரூ.0.10% குறைவு — டேவணித் தொகை செலுத்தியுள்ளார்

2) திரு ஐ.ஜெயசீலன் — மதிப்பீட்டிற்கு ரூ.2.63% அதிகம் — டேவணித் தொகை செலுத்தியுள்ளார்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 490 தேதி 21–9–07ல் ரூ.6,50,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.10% குறைவானதுமான திருமதி எஸ்.சாந்தி அருட்லா நிர்மலா தேவி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண். /07–08

**<u>தீர்மானம் எண்: 662</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

37. இந்நகராட்சி பகுதி ஸ்டேட் பாஙக் காலனி கிழமேல் ரோட்டில் வடிகாலுடன் கூடிய சாலைப்பணி செய்ய இரண்டாவது மாநில நிதிக்குழு பரிந்துரையின் கீழ் செய்ய 19–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

1) திரு எஸ்.பி.முருகையா பாண்டியன் — மதிப்பீட்டிற்கு ரூ.0.12% குறைவு — டேவணித் தொகை செலுத்தியுள்ளார்

2) திருமதி எஸ்.சாந்தி அருட்லா நிர்மலா தேவி — மதிப்பீட்டிற்கு ரூ.0.91% அதிகம் — டேவணித் தொகை செலுத்தியுள்ளார்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 490 தேதி 21–9–07ல் ரூ.3,00,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.12% குறைவானதுமான திரு எஸ்.பி.முருகையா பாண்டியன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண். 131/07–08

**<u>தீர்மானம் எண்: 663</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

38. இந்நகராட்சி திரவியபுரம் 5வது தெருவடிகால் அமைக்கும் பணி 19–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

1) திரு எஸ்.பி.முருகையா பாண்டியன் — மதிப்பீட்டிற்கு ரூ.0.10% குறைவு — டேவணித் தொகை செலுத்தியுள்ளார்

2) திருமதி எஸ்.சாந்தி அருட்லா நிர்மலா தேவி — மதிப்பீட்டிற்கு ரூ.0.491% அதிகம் — டேவணித் தொகை செலுத்தியுள்ளார்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 284
தேதி 27–4–07ல் ரூ.2,20,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு
விகிதத்திற்கு 0.10% குறைவானதுமான திரு எஸ்.பி.முருகையா பாண்டியன்
என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண். 6/07–08

**<u>தீர்மானம் எண்: 664</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

39. இந்நகராட்சி பகுதி குறிஞ்சிநகர் 4வது தெருவில் மண்சாலையை தார்சாலையாக அமைக்கும் பணிக்கு இரண்டாவது மாநில நிதிக்குழு பரிந்துரையின் கீழ் செய்ய 19–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு வி.தஙகராஜ் | மதிப்பீட்டிற்கு ரூ0.15% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு கே.வேலாயுதம் | மதிப்பீட்டிற்கு ரூ.0.03% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 490
தேதி 21–9–07ல் ரூ.5,75,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு
விகிதத்திற்கு 0.15% குறைவானதுமான திரு வி.தஙகராஜ் என்பவரது
ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண். 132/07–08

**<u>தீர்மானம் எண்: 665</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

40. இந்நகராட்சி பகுதி பூபாலராயர்புரம் பாலம் முதல் தென்வடல் நகராட்சியின் எல்லை வரை (மேல அலஙகாரத்தட்டு) வடிகால் பணிகளுடன் சாலைப்பணி செய்ய இரண்டாவது மாநில நிதிக்குழு பரிந்துரையின் கீழ் செய்ய 19–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு எஸ்.ரம்போலா | மதிப்பீட்டிற்கு ரூ.0.11% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எஸ்.சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ.0.51% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 490 தேதி 21–9–07ல் ரூ.9,90,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.11% குறைவானதுமான திரு எஸ்.ரம்போலா என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண். 138/07–08

**<u>தீர்மானம் எண்: 666</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

41. இந்நகராட்சிக்கு கொண்டு வரப்படும் குடிநீர் குழாய் ராசான்குளம் பகுதியில் உடைப்பு ஏற்பட்டதை சரி செய்யும் பணி 24–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு ஜி.பார்த்திபன் | மதிப்பீட்டிற்கு ரூ.0.01% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எம்.தாமஸ் | மதிப்பீட்டிற்கு ரூ.2.69% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.180000/– மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.02% குறைவானதுமான திரு ஜி.பார்த்திபன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண்.139/07–08

**<u>தீர்மானம் எண்: 667</u>**

அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது
அலுவலகக் குறிப்பு 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

42. இந்நகராட்சி பகுதி முனியசாமிபுரத்தில் மழைநீர் வடிகால் கட்டும் பணி பொது நிதியிலிருந்து செய்ய 24–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு ஐ.ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு ரூ.0.11% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எஸ். இன்னாசிமுத்து | மதிப்பீட்டிற்கு ரூ.1.72% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 498
தேதி 21–9–07ல் ரூ.45,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு
விகிதத்திற்கு 0.11% குறைவானதுமான திரு ஐ.ஜெயசீலன் என்பவரது
ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண். 115/07–08

**<u>தீர்மானம் எண்: 668</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

43. இந்நகராட்சி எல்கைப் பகுதி கந்தசாமிபுரம் போல்பேட்டை ரோடு சந்திப்பில் தார்சாலை அமைக்கும் பணி பொதுநிதியிலிருந்து செய்ய 24–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு எஸ்.ரம்போலா | மதிப்பீட்டிற்கு ரூ.0.09% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எஸ்.சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ.1.51% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 509
தேதி 21–9–07ல் ரூ.3,70,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு
விகிதத்திற்கு 0.09% குறைவானதுமான திரு எஸ்.ரம்போலா என்பவரது
ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண்.119/07–08

**<u>தீர்மானம் எண்: 669</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

44. இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட அழகேசபுரம் பகுதியில் தார்தளம் அமைக்கும் பணி சிறுசேமிப்பு திட்டத்தின் கீழ் செய்ய 26–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு ஐ.ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு ரூ.0.10% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எஸ்.இன்னாசிமுத்து | மதிப்பீட்டிற்கு ரூ.1.29% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் வ4/17642/07, 26–7–07 நாள்படி ரூ.2.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.10% குறைவானதுமான திரு ஐ.ஜெயசீலன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண். 102/07–08

**<u>தீர்மானம் எண்: 670</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

45. இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதி பூபாலராயர்புரம் 8வது தெருவில் தார்தளம் அமைக்கும் பணி பொது நிதியில் செய்ய 26–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு ஐ.ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு ரூ.0.08% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எஸ்.இன்னாசிமுத்து | மதிப்பீட்டிற்கு ரூ.1.58% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 485 தேதி 29–8–07ல் ரூ.1,20,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.08% குறைவானதுமான திரு ஐ.ஜெயசீலன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண். 108/07–08

**<u>தீர்மானம் எண்: 671</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

46. இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாதாளச்சாக்கடை மூடிகள் அமைக்கும் பணி பொது நிதியிலிருந்து செய்ய 5–10–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு ஜி.பார்த்திபன் | மதிப்பீட்டிற்கு ரூ.2.03% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு எம்.தாமஸ் | மதிப்பீட்டிற்கு ரூ.6.08% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2,25,000/–க்கு அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 2.03% குறைவானதுமான திரு ஜி.பார்த்திபன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண்.இ6/19900/07

**<u>தீர்மானம் எண்: 672</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

**47.** இந்நகராட்சியின் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் திரு ஜே.விஜயன் என்பவர் நகராட்சியின் பல்வேறு பணிக்கான முன் வைப்புத் தொகை செலுத்தியுள்ளார். அன்னார் செலுத்திய வைப்புத் தொகையில் கீழ்க்கண்ட இனங்களில் வரிசை எண் 1 முதல் 8 வரையில் உள்ள தொகை காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. எனவே அத்தொகையை வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | 9/01–02 | – | ரூ. 5000/– |
| 2) | 128/01–02 | – | ரூ. 1000/– |
| 3) | 135/01–02 | – | ரூ. 100/– |
| 4) | இ1/1456/02 | – | ரூ. 200/– |
| 5) | இ3/4098/02 | – | ரூ. 400/– |
| 6) | 137/03–04 | – | ரூ.2300/– |
| 7) | 174/03–04 | – | ரூ. 800/– |
| 8) | 37/03–04 | – | ரூ.1300/– |
| | | | ரூ. 11100/– |

<u>**அலுவலகக் குறிப்பு:**</u>

1) மேற்கண்ட தொகையை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி ஒப்பந்தக்காரர் பெயரில் இத்தொகைகளுக்கு தணிக்கை தடை ஏதும் இல்லையென அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் இதனை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

பி4/13192/07

<u>**தீர்மானம் எண்: 673**</u>

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

**48.** தமிழக அரசு தனது 30–12–2006ஆம் நாளிட்ட வருவாய் நி.மு. 1(2) துறை அரசாணை (நிலை) எண் 854ல் அரசு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருப்போர்களுக்கு அரசாணையில் கண்டுள்ள விதிகளுக்குட்பட்டு ஆக்கிரமிப்பினை வரன்முறைப்படுத்தி வீட்டு மனைப்பட்டா வழங்க உத்திரவிட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சி எல்கைக்குள் அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ள குடியிருப்பாளர்கள் மாவட்ட வருவாய்த்துறை நிர்வாகத்திற்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்கள் நகராட்சி எல்கைக்குள் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தடையின்மை சான்று வழங்க வேண்டுமென அறிவுறுத்தியபடி மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலான குழு கீழ்க்கண்ட இடங்களை ஆய்வு செய்து அதன் தொடர்பாக தூத்துக்குடி வட்டாட்சியர் அவர்களின் 7–7–2007ம் தேதிய நகஎண் அ2. 1319/2007ஆம் எண் கடிதத்தில் கேட்டுக்கொண்டபடி கீழ்க்கண்ட அரசு புறம்போக்கு நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்குவதற்கு நகராட்சிக்கு ஆட்சேபணையில்லை எனத் தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அரசு புறம்போக்கு நிலங்கள்</u>

1. சகாயபுரம்
   வார்டு 1, பிளாக் 9, நகரளவு எண் 1139/3A169, 1139/99, 1135/1
2. ரயில்வே லைன் கீழ்ப்பகுதி காந்திநகர், ஜார்ஜ் ரோடு வார்டு 1, பிளாக் 10A
   நகரளவு எண் 1152/1 & 2

3. பாத்திமாநகர் 1வது தெரு
   வார்டு 2, பிளாக் 3, நகரளவு எண் 42/1சி

4. பாத்திமாநகர் 2 வது தெரு
   வார்டு 2, பிளாக் 3, நகரளவு எண் 50/198, 50/199, 50/200

5. பாத்திமாநகர் 6வது தெரு
   வார்டு 2, பிளாக் 3, நகரளவு எண் 50/160, 50/161, 50/162, 50/275, 50/276

6. பனிமயநகர்
   வார்டு 1, பிளாக் 10B, நகரளவு எண்1148/1. 1149/13. 1149/33

7. டூவிபுரம் மேற்கு அண்ணாநகர் 1வது தெரு
   வார்டு சி, பிளாக் 16, நகரளவு எண் 38/1

8. அண்ணாநகர் 11வது தெரு
   வார்டு சி, பிளாக் 10, நகரளவு எண் 22

9. பெருமாள்புரம்
   வார்டு2, பிளாக் 30, நகரளவு எண் 3441/2 மாவட்ட தலைமை மருத்துவ மனை காலியிடம்

10. போல்டன்புரம் 3வது தெரு
    வார்டு 2, பிளாக் 29, நகரளவு எண் 3412/2

11. டூவிபுரம் 6வது தெரு
    வார்டு எண் 4, பிளாக் 27, நகரளவு எண் 3801/1

12. டூவிபுரம் 6வது தெரு
    வார்டு 4, பிளாக் 27, நகரளவு எண் 3801/2

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி அரசு புறம்போக்கு நிலத்தில் அமையும் குடியிருப்பு வீடுகள் வருவாய் துறையினருக்கு பாத்தியப்பட்ட இடமாக உள்ளதால் மேற்படி ஆக்கிரமிப்பு வீடுகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க வருவாய் துறையினரே முடிவு செய்து கொள்ளலாம். மேற்படி புறம்போக்கு நிலத்தில் அமையும் குடியிருப்பு வீடுகள் போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறு இல்லாத இடமாக உள்ளதாலும், நகராட்சிக்கு மேற்படி இடங்களில் நிறைவேற்றக்கூடிய திட்டங்கள் ஏதுமில்லாததாலும் மேற்படி சர்வே எண்ணில் அமையும் குடியிருப்பு வீடுகளுக்கு பட்டா வழங்க ஆட்சேபணையில்லை என்று சான்று வழங்கலாம்.

எப்1. 9357/07

**தீர்மானம் எண்: 674**

அலுவலகக் குறிப்பு படி ஆட்சேபனையில்லா சான்று வழங்க அனுமதிக்கப்பட்டது

**49.** இந்நகராட்சி புதிய பேரூந்து நிலையத்திலுள்ள சிறுநீர் கழிப்பறை பழுதுபார்க்கும் பணி பொது நிதியிலிருந்து செய்ய 31–8–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திருமதி பி. கோமதி | மதிப்பீட்டிற்கு ரூ. 0. 31% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு பி. கண்ணன் | மதிப்பீட்டிற்கு ரூ .1. 58% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு:**

1) மேற்கண்ட பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 468 தேதி 29/8/07ல் ரூ 55,000/– க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 31% குறைவானதுமான திருமதி பி. கோமதி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்

ம.ப.எண்.107/2006–07

**தீர்மானம் எண்: 675**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

தலைவர்,
நகர்மன்றம், தூத்துக்குடி

நகர்மன்றம், தூத்துக்குடி
நாள்: 30-10-2007